ஊராட்சி மன்ற தலைவர் ஈசநத்தம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு. N.ராமசாமி அவர்கள்

நாள் : 15.03.2024

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி உராட்சி ஒன்றியம், ஈசநத்தம் ஊராட்சி சர்வே எண். 779/1ல் உள்ள 1.90 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் அமையவிருக்கும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்திரவிடல் தொடர்பாக.

பார்வை :

1. கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் செயலாணை கடிதம் ROC No:0R427KUU/2023/TCP நாள் : 25.11.2023
2. அரவக்குறிச்சி சார்பதிவாளர் அலுவலக தானப் பத்திர பதிவு ஆவண எண்: 4274/2023, நாள் : 09.11.2023
3. ஈசநத்தம் ஊராட்சி மன்ற தீர்மான எண் 116/23.11.2023
4. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கான தெருவிளக்கு விண்ணப்ப மதிப்பீடு இரசீது எண். TRK033AR20391 நாள் : 22.12.2023,
5. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய இ–சலான் நெம்பர் 20231202002677/21.12.2023
6. சொத்து தொடர்பான வக்கீல் திரு. எ.முகம்மது யூசுப் அவர்களின் லீகல் ஒப்பீனியன் சான்று தேதி : 05.07.2023
7. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை வட்டாட்சியர் அலுவலகம், அரவக்குறிச்சி அவர்களின் தடையின்மைச் சான்று ந.க.அ.3/484/2024 நாள் : 11.03.2024
8. ஊராட்சியின் பல்வகை ரசீது எண்:2023/2024/17/3/3/7/5, நாள் : 12.03.2024

உத்தரவு :

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், ஈசநத்தம் ஊராட்சி சர்வே எண். 779/1,ல் கட்டுப்பட்டுள்ள 1.90 ஏக்கர் நிலத்தில் புதிதாக மனைப்பிரிவு அமைப்பதற்கு அனுமதிகோரி M.நூர்தீன்சேட் த/பெ. ஹாஜி முஹம்மது இப்ராஹிம், கதவுஎண்.2/84, ஈசநத்தம் கிராமம், அரவக்குறிச்சி வட்டம், கரூர் மாவட்டம் என்பவரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் பார்வை 1இல் காணும் விவரப்படி கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் செயலாணைக் கடிதம் ROC No:0R427KUU/2023/TCP நாள் : 25.11.2023 மேற்கண்ட சர்வே எண்ணில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ளது.

PTO

மேலும் பார்வை 2இல் காணும் விவரப்படி அரவக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் தானப் பத்திரப் பதிவு ஆவண எண்.4274/2023, 09.11.2023ன்படி ஈசநத்தம் ஊராட்சிக்கு சாலை மற்றும் வாது ஒதுக்கீடுகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை 3இல் காணும் விவரப்படி கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் செயலாணைக்கடிதம் ROC No:0R427KUU/2023/TCP நாள் : 25.11.2023 நிறைவேற்றும் விதமாக இம்மனைப்பிரிவினை அங்கீகரித்து ஈசநத்தம் ஊராட்சி மன்றம் தீர்மானம் எண்:116/ 23.11.2023ன் படி தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் செயலாணைக் கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப் பிரிவுக்கான நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனுதாரர் மனை அளவுகளை பிரித்தும் குடிநீர் வசதி ஏற்படுத்தியும், பார்வை 4இல் காணும் விவரப்படி தெருவிளக்குகள் அமைத்தும் அடிப்படை வசதிகளை நிறைவேற்றியுள்ளார். பார்வை 5இல் காணும் விவரப்படி மனைப்பிரிவில் உள்ள உள்ளாட்சிக்கு சொந்தமான இடத்தினை உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு பதிவு செய்யப்பட்டதையும் மற்றும் பார்வை 6இல் காணும் விவரப்படி சொத்து தொடர்பான லீகல் ஒப்பீனியன் ஆவணம் சமர்ப்பிக்கப் பட்டதையும் பரிசோதிக்கப்பட்டது.

பார்வை 7இல் காணும் விவரப்படிக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை வட்டாட்சியர் அவர்களின் தடையின்மைச் சான்று வறப்பட்டுள்ளது.

மேலும் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள இம்மனைப் பிரிவிற்கு 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் 2/1899 உட்கூறு AA, பிரிவு 47 மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அரசாணை எண்.79 விதி எண்.3இன் படி கூராய்வுக் கட்டணம் மற்றும் விதி எண்.9இன்படி மொத்த குடியிருப்பு மனைப்பிரிவு பரப்பிற்கு உள்ளாட்சி அமைப்பு நிலப் பயன் மாற்றக் கட்டணமாக அரசின் வழிகாட்டி மதிப்பு தொகையில் 3சதவீதம் தொகையினை ஈசநத்தம் ஊராட்சி பல்வகை இரசீது எண்.2023/2024/17/3/3/7/5, நாள் 12.03.2024 இன் படி ஈசநத்தம் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் ஏதேனும் விடுபட்டிருப்பின் அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் ஈசநத்தம் ஊராட்சி

சர்வேஎண்.779/1 ல் உள்ள 1.90 ஏக்கர் பரப்பளவுள்ள மனைப் பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்திரவிடப்படுகிறது.

தலைவர்,
ஈசநத்தம் ஊராட்சி,
அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்
கரூர் மாவட்டம்

இணைப்பு :

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு வரைபடம் மற்றும் வரைபட நிபந்தனைகள்
2. ஈசநத்தம் ஊராட்சி மன்ற தீர்மான நகல்
3. உள்ளாட்சிக்கு உரிமை மாற்றம் செய்த வருவாய் ஆவணம்
4. சொத்து தொடர்பான லீகல் ஒப்பீனியன் நகல்

நகல்:

1. உயர்திரு. உதவி இயக்குநர் அவர்கள், மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை அலுவலகம் கரூர்.
2. சார் பதிவாளர் அவர்கள், சார் பதிவாளர் அலுவலகம், அரவக்குறிச்சி
3. உயர்திரு. உதவி இயக்குநர் அவர்கள், நில அளவை மற்றும் பதிவேடுகள் பராமரிப்புத்துறை கரூர்.
4. M.நூர்தீன்சேட் த/வ. ஹாஜி முஹம்மது இப்ராஹிம், கதவுஎண்.2/84, ஈசநத்தம் கிராமம், அரவக்குறிச்சி வட்டம், கரூர் மாவட்டம்

தீர்மான நகல்

15.03.2024 -ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு ஈசநத்தம் ஊராட்சியின் சாதாரணக்கூட்டம் தலைவர் திரு. N.ராமசாமி அவர்கள் தலைமையில் ஈசநத்தம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டநடவடிக்கைகள்.

வ. எண்	பொருள் :	தீர்மானம்
1.	ஈசநத்தம் ஊராடசிக்குட்பட்ட ஈசநத்தம் கிராம சர்வே எண்.779/1இல், 1.90 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உத்தேச மனைப்பிரிவிற்கு கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் செயலாணைக்கடிதம் எண். ROC No.OR427KUU/2023/TCP க.மா. நாள்.25.11.2023ன்படி தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் சிறப்பு நிபந்தனைகளின்படி மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் ரூ.1000/- மற்றும் நிலத்தின் வழிகாட்டு மதிப்பில் 3% தொகை ரூ.30,000/-னை ஊராட்சி அமைப்பு நிலப்பயன் மாற்றக் கட்டணமாக ஈசநத்தம் ஊராட்சி மன்றத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேற்கண்ட சர்வே எண்ணில் அமைக்கப்பட்டுள்ள மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டதற்கு ஊராட்சியின் அங்கீகாரத்திற்கு	தீர்மான எண். 155 அங்கீகரிக்கப்பட்டது.

தலைவர்,
ஈசநத்தம் ஊராட்சி.